ශ්‍රී ලංකා අග්‍රාමාත්‍ය

இலங்கையின் பிரதம அமைச்சர்

**Prime Minister of Sri Lanka**

## வாழ்த்துச் செய்தி

தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பம், இன்று உலகின் புதிய கண்டுபிடிப்புக்களின் முன்னோடியாக விளங்குகின்றது. தொடர்பாடலானது அன்றாட மனித வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்து தகவல்களை எமது வாழ்க்கையுடன் இணைப்பதுடன் அது மிகவும் விளைதிறன், வினைத்திறன்மிக்க முன்னேறிய மனித இருப்புக்கான பலம்மிக்க துணையாக நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

1865 ஆம் ஆண்டில் சர்வதேச தொலைத்தொடர்பு சங்கத்தின் தோற்றத்துடன் ஆரம்பிக்கப்பட்ட சர்வதேச தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப தினம் வருடாந்தம் மே மாதம் 17 ஆம் திகதி உலகம் பூராவும் கொண்டாடப்படுவதுடன், இம்முறை அது “சகலருக்கும் செயற்கை அறிவின் சாதகமான நன்மைகளைப் பெற்றுக்கொடுத்தல்” எனும் தொனிப் பொருளில் மிகவும் விரிவான கலந்துரையாடலுக்காக எம்மனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றது.

தொலைபேசியைக் கண்டுபிடித்தல், முதன்முதல் செய்மதியை விண்வெளிக்கு அனுப்பியமை முதல் இணையத்தளத்தின் கண்டுபிடிப்பு வரை தொலைத்தொடர்பு செயற்பாடுகள் முன்னொருபோதுமில்லாத வேகத்துடன் மற்றும் புதிய கண்டுபிடிப்புக்களுடன் வளர்ச்சியடைந்துள்ளது. தற்போது சமூக மற்றும் பொருளாதார ரீதியில் செயற்கை அறிவைப் பயன்படுத்தி தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் நன்மைகளை மக்கள் அனைவருக்கும் பெற்றுக்கொடுத்தல் வரை அது துரித முன்னேற்றத்தை அடைந்துள்ளது.

நிலைபேறான அபிவிருத்திச் செயற்பாடுகளை யதார்த்தமாக்கிக்கொள்ளும் நடவடிக்கையின்போது நவீன தொழில்நுட்பத்தை மிகவும் பயன்மிக்க வகையில் பயன்படுத்திக்கொள்வதற்கும், வினைத்திறன்மிக்க வகையில் அபிவிருத்தித் திட்டங்களை தயாரித்தல், வழிநடாத்துதல் மற்றும் பேணி வருவதற்காக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறையில் செயற்கை அறிவின் பயன்பாடு எமது நாட்டுக்கும் நன்மை பயப்பதாக அமையும்.

தேசத்தின் முன்னேற்றத்தின் நிமித்தம் “சகலருக்கும் செயற்கை அறிவின் சாதகமான நன்மைகளைப் பெற்றுக்கொடுத்தல்” எனும் தொனிப் பொருளை யதார்த்தமாக்கிக்கொள்ள இயலுமாகட்டும் எனப் பிரார்த்திப்பதுடன், சர்வதேச சர்வதேச தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப நினைவு தின விழாவுக்கு எனது உளமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ரணில் விக்கிரமசிங்க

பிரதம அமைச்சர்

2018. 05. 08